[1972 சனவரி 29

சென்னை குதிரைப்பந்தய சங்கம்

* 112 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்னை குதிரைப் பந்தய சங்கத்தில் அரசு நியமன உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

திரு. சு. துரைசாமி : இப்பொழுது அதில் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்? அரசாங்கம் நியமிக்கின்ற அங்கத்தினர்களுடைய எண்ணிக்கை எத்தனை? அரசாங்கம் நியமிக்கின்ற அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகரிப் பதற்கு உத்தேசம் உண்டா? அதனுடைய வருமானத்தைப் பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்த வகை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ரேஸ் கிளப் மானேஜிங் கமிட்டியில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை இப்பொழுது 12. இதில் அரசாங்கப் பிரதிநிதிகள் இரண்டு பேர் இருக்கிறார்கள். அதை நான்கு பேராக ஆக்க வேண்டுமென்று அரசு எழுதியிருக் கிறது. அதில் தீர்மானம் போட்டு, அதற்குப் பிறகு அவர்களுடைய பொதுச் சபை ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பார்கள். அதற்குப் பிறகு அரசுக்குத் தகவல் வந்து, அரசு மேலும் இரண்டு பேரை நியமிக்கும்.

திரு. எம். தேவராசன் : குதிரைப் பந்தயத்தால் அரசுக்கு நல்ல வருவாய் வருவதால், ஏற்கெனவே குதிரைப் பந்தயங்கள் நடந்துவந்து இப்பொழுது நிறுத்தப்பட்டுள்ள கோவை போன்ற நகரங்களில் மீண்டும் குதிரைப் பந்தயங்கள் நடத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : புதிதாக அப்படிப்பட்ட குதிரைப் பந்தயங்கள் நடத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, புதிதாக இல்லையென்றாலும் கூட, குதிரைப் பந்தயத்தை மொத்தமாக அரசே ஏற்று நடத்தும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது கால ஓட்டத்தில் நடைபெற வேண்டிய விஷயம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, இப்போது நடை பெறுகின்ற குதிரைப் பந்தயம் செட்டி நாட்டைச் சேர்ந்தவர் களால் நடத்தப்படுகிறது. அவர்களே நடத்துகின்ற காரணத்தால் அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ, என்ன செய்யவேண்டு மென்று நினைக்கிறார்களோ அதைத்தான் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு

1972 சனவரி 29]

அதிலே அரசாங்கத்தின் பிடிப்பு அதிகமாக இருப்பதற்கு வேண்டிய வழிவகைகளை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது யாருடைய சொத்தாக இருந்து வருகிறது என்பதைப்பற்றி எல்லாம் இப்போது நாம் கவலை கொள்ளவேண்டியதில்லை. அது யாராலும் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் நடைபெற வேண்டுமென்ற அளவுக்கு அரசாங்கம் பல நிபுணர்களைக் கொண்ட குழுவை நியமித்து, அவைகளை ஆராய்ந்து, தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உறுதியாகச் சொல்லி இருக்கிறது. அவைகளைப் பற்றிக் குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதிலே யாருடைய ஆதிக்கமும் வாராமல் இந்த அரசு விரைவில் தக்க நடவடிக்கையை எடுத்துக்கொள்ளும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தக் குழுவிலே உத்தியோகப் பற்றற்றவர்களை நியமனம் செய்ய அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொதுவாக இப்போது மானேஜிங் கமிட்டி உறுப்பினர்களில் 12 பேர் உத்தியோகப் பற்றற்றவர்களாக இருக்கிறார்கள். அரசின் சார்பில் இருவர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் 'ஹோம் செக்ரட்டரி', இன்னொருவர் ஐ.ஜி. ஆஃப் போலீஸ். மேலும் இருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது சம்பந்தமாக முன்பு இந்த அரசாங்கத்திடம் ஒரு கொள்கை இருந்தது. அந்தக் கொள்கையை இப்போது அரசாங்கம் அமுல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நமது மாநிலத்தில் குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட்டால், குதிரைப் பந்தயம் நடைபெறக்கூடிய பிற மாநிலங்களுக்குச் செல்ல நாம் விரும்பாவிட்டாலும் 'பாஸ்போர்ட்' வாங்கிச் செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டால்தான், நமது மாநிலத்தில் அதை வெற்றிகரமாக நடத்த முடியும். இல்லாவிட்டால், தமிழ்நாட்டிலே உள்ள பணம் சுற்றியுள்ள பக்கத்து மாநிலங்களுக்குச் சென்றுவிடும். அதையெல்லாம் உத்தேசித்துத்தான் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதில் தீவிர கவனம் செலுத்த முடியாமல் இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரசாங்கத்தில் உத்தியோகம் செய்கிறவர்கள் 'ஸ்டூவேர்ட்ஸ்' ஸாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பெண்களும் அரசாங்க ஊழியர்களாக இருக்கிறார்கள். எனவே, பெண்களும் ஸ்டூவேர்ட்ஸ்ஸாக நியமனம் செய்யப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்றியமையாதது என்று அம்மையார் அவர்கள் சொல்வார்களேயானல், அதைப் பற்றி யோசித்து, பெண்களையும் உறுப்பினர்களாக நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முற்படலாம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, குதிரைப் பந்தயத்திலே ஏழை எளியவர்களும், வசதியற்றவர்களும் கூட ஈடுபடுவதால் அந்தக் குடும்பங்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. நமது மாநிலத்தில் குதிரைப் பந்தயத்தை ஒழித்து விட்டால், 'பாஸ்போர்ட்' வாங்கி வேறு மாநிலங்களுக்குச் செல்லும் நிலைமை ஏற்பட்டால், வசதி படைத்தவர்களால்தான் அது முடியும். வசதியற்றவர்கள் போக முடியாது. ஆகவே இந்தச் சாதாரண மக்கள் நிலையைக் கருத்திற்கொண்டு, அரசாங்கம் இதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேறு மாநிலங்களின் எல்லையில் இருக்கக்கூடிய வசதியற்றவர்கள், அப்போதும் போகத் தான் செய்வார்கள்.

தமிழ்நாட்டில் கள்ள நாணயங்கள்

* 113 வினு—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) கள்ள நாணயங்கள் (நோட்டுகள்) தயாரிக்கிற கோஷ்டி ஒன்று தமிழகத்தில் நடமாடிக்கொண்டு இருக்கிறதாக புகார் ஏதாவது அரசுக்கு வந்ததா?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தமிழ்நாட்டில் இப்போது கேரளாவிலிருந்து அச்சிடப்பட்ட கள்ளநோட்டுகள் இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையைக் கேரள அரசாங்கமும் நம்முடைய அரசாங்கமும் சேர்ந்து நடவடிக்கை எடுத்துத் தடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 'ஸ்பெஷல் செல்' போட்டு, அதைத் தடுத்து நிறுத்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. கேரளாவில் உள்ள கள்ள நோட்டுக்கும் இங்குள்ள கள்ள நோட்டுக்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்பதைப்பற்றி புலன் விசாரணை நடைபெற்றது. இப்போது கேரளத்தோடு தொடர்பு கொண்டு, இரு மாநிலங் களிலுமுள்ள கள்ள நோட்டுகள் சம்பந்தமாக நமது மாநிலத்திலே புலன்விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இரண்டு மாநிலங்களும் சேர்ந்து இதற்கு ஒரு நடவடிக்கை எடுப்பது என்பது இயலாத காரியம்.